**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 131/2021** **நாள்.20.01.2026**

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சகாயநாதன் | தொழில் | |
| த. பெ./க.பெ. | வனத்தையன் | சாதி | |
| கிராமம் | சிறுநாம்பூண்டி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 56 |

**வா.சா.1**

**2 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். கூலி வேலை செய்து வருகிறேன். என் மனைவி பெயர் அமராவதி. எனக்கு 2 பிள்ளைகள். என்னுடைய பிள்ளைகள் கல்லூரியில் படித்து வருகிறார்கள். என் தந்தை வழி பாட்டனார் பெயர் மாணிக்கம். 2002 ஆம் ஆண்டுக்கு முன்பு பிலிப்ஸ் தனியார் நிறுவனத்தில் செக்கியூரிட்டியாக வேலை செய்தேன். என் அப்பாவும் அந்த நிறுவனத்தில் சுமை தூக்கும் தொழிலாலியாக வேலை பார்த்தார். என் தகப்பனாரின் வேலையைதான் எனக்கு வழங்கினார்களா என்றால் இல்லை. என் அம்மா சுமார் 10 ஆண்டுகள் இட்லிகடை வைதத்து நடத்தினார். நானும் என் குடும்பத்தினரும் கத்தோலிக்க கிறுத்துவ மதத்தை பின்பற்றுகிறோம். பாகப்பரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கலுக்கு வழக்கறிஞரிடம் விபரங்களை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். என்னுடைய முதல் விசாரணை சங்கதிகளையும் நான் தான் சொன்னேன். வழக்குரை மற்றும் முதல் விசாரணை வாக்கு மூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 1,3,4 பிரதிவாதிகளின் பெயர்கள் வழக்கில் தவறாக குறிப்பிடப்டுள்ளன என்றாலும் கல்வி சான்றில் உள்ள வாறு குறிப்பிடப்படவில்லை என்றாலும் அது பற்றி தெரியாது. 1 ஆம் பிரதிவாதி சமையல் வேலை பார்த்து வந்தார். தற்போது என்ன வேலை செய்கிறார் என்று தெரியாது. அவர் சுமார் 40 ஆண்டுகளாக பெங்களூருலில் வசிக்கிறார். 3 ஆம் பிரதிவாதி வேலை எதுவும் செய்யவில்லை திருமனம் ஆகி .சுமார் 33 வருடமாக பாண்டிச்சேரியில் வசித்து வருகிறார். 4 ஆம் பிரதிவாதி 2003 முதல் கன்னியாஸ்திரியாக நெய்வேலி அருகே மடத்தில் வசித்து வருகிறார். 4 ஆம் பிரதிவாதி

வேலை எதுவும் செய்யவில்லை என்றாலும் மதத் தொண்டு ஆற்றுகிறார் என்றாலும் சரிதான். 4 ஆம் பிரதிவாதியால் அந்த மடத்தை விட்டு வெளியே வர முடியாது என்றால் உடல் நிலை சரியில்லாமை, உறவினர் இறப்பு போன்ற காரணங்களுக்காக அனுமதியுடன் வெளியே வரலாம். ஆண்டுக்கு 15 நாள் விடுமுறையும் உண்டு. அவர் தனது தனிப்பட்ட பலன்களுக்காக அனுமதி கோரி வெளியே வரமுடியாது என்றால் சரியல்ல. இந்த விபரம் குறித்து 4 ஆம் பிரதிவாதியை விசாரித்தால் தெரிய வரும் என்றால் சரிதான். மேற்பண்ட பிரதிவாதிகள் செஞ்சி வட்டத்தில் வசிப்பதாக குறிப்பிட்டு வழக் குரை தாக்கல் செய்யப்பட்டிருந்தால் அது தவறா என்றால் ஆமாம். என்னுடைய உடன் பிறந்த நபரான சைமன் என்பவர் என்ன ஆனார் என்றால் அவர் 1983 ஆம் ஆண்டு தொலைந்து போய்விட்டார். இது தொடர்பாக போலிசில் புகார் எதுவும் கொடுத்துள்ளோமா என்றால் ஆமாம். அதற்கான ஆவணம் எதையும் வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். அவ்வாறு ஆவணம் வழக்கில் குறியீடு செய்யப்படவில்லை என்றால் தெரியாது. வழக்கிச் சொத்தில் சைமனுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான். சைமனின் பாகம் யாருக்கு சேரவேண்டும் என்று வழக்கில் பரிகாரம் கோரி உள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் நான் 1/5 பாகம் கோரியுள்ளேன். சைமனை பற்றி எந்தவித விளக்கமும் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் அவருடைய பாகம் எங்கள் எல்லோருக்கும் சேரவேண்டியது என்று மனதில் வைத்து இந்த பாகத்தை கோரியுள்ளோம். சைமன் கானாமல் போனதாக விளம்பரம் எதுவும் கொடுத்தோமா என்றால் இல்லை. சைமனுக்கு திருமனம் ஆவதற்கு முன்பே காணாமல் போய்விட்டார். சைமன் பற்றி வளிக்கம் எதுவும் சொல்லாமலும் மற்றும் பரிகாரம் எதுவும் கோராமலும் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதி தர்ப்பு பதிலுரையை படித்துப் பார்த்தேனா என்றால் நினைவில்லை. தற்போது படித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான்கு ஐட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண் சரியாக நினைவில்லை. ஜக்குபந்தி எதுவும் குறிப்பிட்டு வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு 1,2 ஐட்ட சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் ஆக இருந்தது என்றால் மரியம் பீவி அம்மாளுக்கு பாத்தியமாக இருந்தது. இது குறித்து வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவை தற்போது யாருக்கு சொந்தமானவை என்றும் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதே போல் வழக்கு 3,4 ஐட்ட சொத்துக்கள் குறித்தும் வழக்கில் விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வழக்கில் எனது தரப்பில் 3 அவணங்கள் தாக்கல் செய்துள்ளோம். என்னிடம் காட்டப்படும் வா.சா, ஆ. 2 ஐ நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் வனத்தையன் 2 ஆம் பிரதிவாதிக்கு 23.12.2015 ல் எழுதி கொடுத்ததாக கண்டுள்ளது. அது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். வா.சா. ஆ. 2 ல் வழக்கு சொத்துக்கள்

உள்ளனவா என்றால் ஆமாம். வா,சா,ஆ – 2 குறித்து நான் பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**